112 முக்கிய பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களை அமைத்து இருக்கிறோம். எனவே தொழிலில் அக்கறை உள்ள பெண்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். ஆகவே அவர்கள் அதைப் பயன்படுத்திக் கொண்டு செயல்பட முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, தனியாக ஒவ்வொரு யூனியனிலும் இல்லா விட்டாலும் கூட ஒரு தொகுதிக்கு ஒன்றாக ஆரம்பிக்கலாம். 100 பெண்களுக்கு ஒன்று என்று ஆரம்பிப்பீர்களேயானால் அவர்களுக்கு வருவாய் பெருகக்கூடிய நிலைமை உருவாகும். ஆகவே, அது மீண்டும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப் படுமா என்பதை அறிய விரும்புகிறேன். அத்தோடு கண்மாய் கள் இருக்கின்றன. அது, பலமுறை நான் இந்த மன்றத்திலே எடுத்துச் சொல்லியிருக்கிறேன். இந்தக் கண்மாய்களிலே ஆக்கிரமிப்பு செய்துகொண்டு தண்ணீர் தேங்குவதற்குக் கூட இடம் இல்லாத நிலைமை இருக்கிறது. அங்கே புல் வளர்க்கவேண்டும். புல் வளர்ப்பதற்காக ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு மாண்புமிகு ஆதித்திராவிட நலத்துறை அமைச்சர் அவர்கள் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சரோடு கலந்து பேசி, அங்கே ஆக்கிரமிப்புகளை அகற்றி புல் வளர்த்துக் கொடுப்பதற்கான நடவடிக்கையை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் தான் பரிசீ லிக்க வேண்டும். பெண்களுக்கு சங்கங்களை ஆரம்பிப்பது பற்றி சொன்னார்கள். நீங்களும் ஒத்துழைப்பு தாருங்கள். நிறைய சங்கங்களை ஆரம்பிக்கிறோம். அந்தச் சங்கங்களுக்கு கடனாக மாடுகளை தருகிறோம். அந்த மாடுகளை பராமரிப்ப தற்கு வேண்டிய மேய்ச்சல் நிலங்களைப் பற்றி கேட்டார்கள். அதைப்பற்றி நான் வருவாய்த்துறை அமைச்சரோடு கலந்து பேசி நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 664, திரு. டி. சுதர்சனம், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்

664—

சாம்பலைக் கொண்டு கல் தயாரிக்கும் தொழிற்சாலை அமைத்தல்.

*289 திரு. டி. சுதர்சனம் :

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் சாம்பலைக் கொண்டு கல் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

1992 ஏப்ரல் 28]

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) சாம்பலைக் கொண்டு கல் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்று அமைக்கத் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் உத்தேசித்துள்ளது. இத்தொழிற் திட்டம் ஆண்டொன்றுக்கு 30 மில்லியன் கற்கள் தயாரிக்க சுமார் ரூ. 5 கோடி முதலீட்டில் ஏற்படுத்தப்படும்.

திரு. டி. சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலக்கரியிலேயிருந்து கிடைக்கின்ற சாம்பலைக் கொண்டு எண்ணூரிலே கற்களை தயாரிக்கின்ற தொழிற்சாலை முன்பு துவக்கப்பட்டது. அது லாபத்திலே இயங்கிக்கொண்டிருக்கிறதா? நட்டத்திலே இயங்கிக் கொண்டிருக்கிறதா? இப்போது துவங்க இருக்கிற தொழிற்சாலை எந்தப் பகுதியிலே துவங்கப்படும்? அதற்கு மூலப் பொருள் என்ன என்பதை தமிழக அரசு தெரிவிக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-40

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாம்பலை மூலப்பொருளாகக் கொண்டு கல் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கப்படவுள்ளது. செங்கல்பட்டு—எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் அனல் மின் நிலையம் அருகாமையிலே இத்திட்டம் அமைக்கப்படவுள்ளது. இத்திட்டம் வெற்றிபெறுமா என மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். 1990 முதல் 1995 ஆம் ஆண்டு கால அளவில் தேசிய வீட்டு வசதித் திட்டத்தை அமல்படுத்துவதற்கு மட்டும் 2,86,496 மில்லியன் கற்கள் தேவைப்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது. தற்போதைய உற்பத்தித்திறன் சுமார் 2,31,598 மில்லியன் கற்கள் ஆகும். எனவே உற்பத்தித் தேவையை விட கணிசமாக குறைவாக இருப்பதால் இது வெற்றிபெறும் என எதிர்பார்க்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இன்னொரு கேள்வியைக் கேட்டார்கள். அதற்கு தற்போது என்னிடம் விடை இல்லை. தனிக் கேள்வி போட்டால் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு பதில் தெரிவிக்கப்படும் எனத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. டி. சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிலக்கரியிலே கிடைக்கின்ற சாம்பலைக் கொண்டு ஏற்கெனவே ஒரு தொழிற்சாலை எண்ணூரிலே துவக்கப்பட்டது. அது இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறதா அல்லது நடைபெறாமல் நின்றுவிட்டதா என அறிய விரும்புகிறேன்.

[1992 ஏப்ரல் 28

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அந்தக் கேள்விக்கு என்னிடம் விடை இல்லை. தனிக் கேள்வி போட்டால் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு பதில் தெரிவிக்கப்படும் எனத் தெரிவித்துக் கொள்கிறேன்.

649—

சார்பதிவாளர் அலுவலகத்தை மாவட்ட சார்பதிவாளர் அலுவலகமாக மாற்றல்.

*4060 திரு. இராம. இராமநாதன் ;

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பரா—

(அ) கும்பகோணம் சார்பதிவாளர் அலுவலகத்தை மாவட்ட சார்பதிவாளர் அலுவலகமாக மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது மாற்றப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும்(ஆ) : கும்பகோணம் சார்பதிவாளர் அலுவலகத்தை மாவட்ட பதிவகமாக மாற்றக்கோரும் செயற்குறிப்பு, பதிவுத் துறைத் தலைவரால் அனுப்பப்பட்டுள்ளது. இச் செயற்குறிப்பு மீது அரசின் நிதி நிலைமையைக் கருத்திற் கொண்டு முடிவெடுக்கப் படும்.

580—

குரவபுலம் ஊராட்சிப் பகுதியில் மின்விளக்கு விஸ்தரிப்பு வசதி

*5184—திரு. பி. வி. இராஜேந்திரன் ;

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

வேதாரண்யம் தொகுதி, குரவபுலம் ஊராட்சிப் பகுதியில் தெருவிளக்கு விஸ்தரிப்பு வசதி கோரி ஊராட்சி தீர்மானித்து அதற்கான காப்புத்தொகை ஒன்றியம் வாயிலாக செலுத்தப்பட்டு ஐந்து ஆண்டுகளாகியும் இதுவரை மின்விளக்கு விஸ்தரிப்பு வசதி வழங்கப்படாத நிலையில் உள்ளதை தவிர்த்து பணி முடிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?